22nd July 1964]

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினர் "மாணிக்கம் கால்வாய்" என்று எப்படிக் கேள்வி போட்டார்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN : The Hon. Speaker is cross-examining.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: இந்தக் கால்வாயில் தண்ணீர் வந்தபோது மாணிக்கமாக இருந்தது. அதனால் மாணிக்கம் கால்வாய் என்று பெயரிட்டார்கள் என்று சொன்னார்கள். உண்மையில் தண்ணீர் கரிய மாணிக்கமாக வருவதனால் கரிய மாணிக்கம் என்ற பெயர் வைக்க உத்தேசம் உண்டா?

வெற்றிலே பயிரிடுவோருக்கு உதவி

* 612 **கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வெற்றிலை பயிரிடும் விவசாயிகளுக்கு சேதம் விளையாதிருக்கவும் நல்ல பலன் கிடைக்கவும் அரசாங்கம் என்ன உதவி புரிகிறது?

(இ) கடன் உதவிகள் செய்திருந்தால் விவரமென்ன?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) இம் மாநிலத்தின் பல்வேறு பாகங்களில் வெற்றிலைக்கொடிக்கால் நோய்களைத் தடுப்பதற்காகத் தக்க முறைகளை வகுக்கும்பொருட்டு, வெற்றிலைக் கொடிக்கால் நோய் பற்றிய ஆராய்ச்சி குறித்த இணைந்த திட்டம் ஒன்றுக்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

(இ) தஞ்சாவூர், தென்னாற்காடு மாவட்டங்களிலும் 1963-ம் ஆண்டு அக்டோபர் மாதம் புயற் காற்றாலும், பெருமழையாலும் (வெற்றிலைக் கொடிக்கால் குத்தகைக்கு எடுத்துக்கொண்டவர்கள் உட்பட வெற்றிலை பயிரிடுவோர் பாதிக்கப்பட்டனர். அவர்களுக்கு அரசாங்கம் ஒரு எக்கருக்கு ரூபாய் 500 வீதம் கடன் வழங்க அனுமதி வழங்கியது.

(a) The Government have sanctioned a co-ordinated scheme for the investigation of betelvine wilt diseases to evolve control measures for the disease in the various parts of the State.

(b) The Government sanctioned the grant of a loan of Rs. 500 per acre to the betelvine growers (including the lessees of the betelvines) who were affected by the cyclone and heavy rains in October 1963, in Thanjavur and South Arcot districts.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: எக்கர் ஒன்றுக்கு 500 ரூபாய் கொடுக்கப்படுகிற கடனில் சர்க்கார் மானியம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: பாதிக்கப்பட்டவர்களுக்கு சப்ஸிடியாகவும் கொடுத்திருக்கிறார்கள். 1,200 குடும்பங்களுக்கு 40 ரூபாய் வீதம் 4,800 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். 98 எக்கராவுக்கு நூறு ரூபாய் வீதம் 9,800 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள்.

[22nd July 1964

திரு. மீ. கலியாணசுந்தரம் : வெற்றிலே நோய் தடுப்பு நடவடிக்கையாக ஒரு திட்டம் அமைந்திருக்கிறது என்று சொன்னுர்கள். அந்தத் திட்டத்தின் விவரம் என்ன என்று அறிய முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : வெற்றிலே நோய் தடுப்பு சம்பந்தமாக அதிகாரிகள் ஒன்று கூடி எடுத்திருக்கும்படியான திட்டம்தான்.

திரு. கே. பொன்னேயன் : வெற்றிலே விவசாயம் நம் நாட்டில் மட்டுந்தான் நடைபெறுகிறதா அல்லது வேறு நாடுகளிலும் நடைபெறுகிறதா ? வேறு நாடுகளில் வெற்றிலேக் கொடிக்கால் இருக்குமானல் உயர்ந்த ரகமான கொடிகளே வரவழைத்து விவசாயிகளுக்குக் கொடுக்க முன் வருவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : நமது நாட்டில் மட்டுந்தான் வெற்றிலேக் கொடிக்கால் இருப்பதாகத் தெரிகிறது. நான் சைனுவுக்குப் போயிருந்தபோது அங்கு நான் வெற்றிலேக் கொடிக்காலேப் பார்க்கவில்லே.

திரு. இரா. நெடுஞ்செழியன் : வெற்றிலேக் கொடிகள் பாது காப்புக்கும் வளர்ச்சிக்கும் வழிவகைகள் எடுத்துக் கொள்ள ஆராய்ச்சி நிலேயம் இருக்கிறதா ? இல்லேயென்ருல் நிறுவ உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லே. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

சங்குத் தொழிற்சாலே

*** 613 கேள்வி—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

கிழக்கு இராமநாதபுரத்தில் சங்குத் தொழிற்சாலே ஏற்படுத்த அரசினருக்கு உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : The matter is under the consideration of the Government.

Penal water rate (Lower Bhavani Project)

* 614 Q.—SRI A. S. DAKSHINAMOORTHY GOUNDER : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether there is any proposal before the Government to collect penal water rate from the poor agriculturists who are cultivating paddy from this year under the Lower Bhavani Project Area ; and

(b) if so, whether the Government are aware that this will result in great hardship to them?